# கற்பகம்

Nallur Branch Library



Nallur Branch Library

## சபகத்தினர் நன்மை பெற கொழும்பில் ஒரு மாநாடு!

விலை ரூ. 3.00 மாசி-பங்குனி 1989

மாசி - பங்குனி

1989

மலர் 10

இதழ் 2

வெளியீடு:

வடமாகாண
தெ. ப. பொ. கூட்டுறவு
சங்கங்களின் சமாஜம்
330, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22713

ஆசிரியர்:
கே. வி. நடராஜன்

வடிவமைப்பும்
அச்சீடும்

ஸ்வர்ணம் பப்ளிசிரீஸ்,
5, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

# வேண்டாம் இந்த சமூக விரோதச் செயல்

மதுபானம் மனித வர்க்கத்தின் முதலாம் நம்பர் எதிரி என்பதில் யாருக்கும் கருத்து வேறு பாடு இலையாது.

குடி கேடான கொடுமையைப்பற்றி நல்ல என் ணம் குடியைக் கெடுக்கும் பேய்ச் சாத்தான் என்பார் இன்று நேற்று சொல்லப்பட்ட ஒன் றல்ல: பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே பெரியோர்கள் பலரும் சொல்லி வைத்துப் போயுள்ளார்கள்.

குறிப்பாக வள்ளுவர் பெருந்தகையின் திருக்குறள் ஒன்றில் —
“கள்ளுண்டார் நஞ்சுண்டார்” என்று சொல லப்பட்டுள்ளது

கள்ளையே நஞ்சு என்று வள்ளுவர் சொன் னார் எனில் மற்றும் செயற்கை மதுபான வகையறாக்களைப்பற்றி சொல்லவும் வேண் டுமா?

கசிப்பு என்கின்ற செயற்கை கிருமி நாசினி சமீப காலத்தில் கண்டுபிடிக்கப் பட்டு குடிப்பவர்கள் மத்தியில் மிகப் பிரபல் யம் பெற்றுவிட்ட ஒருவகை கொடிய நச்சுத் திராவகம்.

குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க முற் படும் சமூக விரோதக் கும்பல் இந்தக் கைங்

கரியத்தைச் செய்து கொடிய இந்தத் திராவகத்தை (கசிப்பை) உற்பத்தி செய்து மிக மலிவு விலையில் கிடைக்கச் செய்வதால் அதைப் பருகுபவர்கள் அற்ப ஆயுளிலேயே மூடிந்து போய்விட நேரிடுகிறது.

இந்த விஷ சாராயத்தின் தாற்பரியத்தை பல சமூக நல தாபனங்களும், நலன் விரும்பிகளும், கற்பகமும் கூட பல முறை எடுத்தியம்பிய போதிலும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்துள்ளது.

அத்துடன் இன்று இந்தக் கசிப்புக்கு வேறொரு நாமகரணம் சூட்டப்பட்டு விற்கப்படுவதாகவும் கற்பகத்திற்கு செய்தி எட்டி உள்ளது.

பனம் கள்ளிலிருந்து வடிக்கப்பட்ட பனம் சாராயம் என்று விற்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

இது மிகவும் அபத்தமான கூற்று. இதனை உண்மையென்று நம்பலாகாது. இதில் மக்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும்.

கசிப்புக்கு மற்றொரு பெயர் பனம் சாராயம் என இதனை விளக்கும் வகையில் பனம் பொருள் அபிவிருத்திச் சபை தலைவரும் எமது சமாச செயலாளருமான திரு. கே. நடராசா அவர்கள் பத்திரிகையில் விளம்பரம் மூலம் மக்களை விழிப்பாயிருக்கும்படி எச்சரித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

உண்மையான பனம் சாராயம் உடலுக்கு கெடுதலற்றது. நீரிழிவு போன்ற சில நோய்களுக்கு மருந்தாகவும் பாவித்து அந்த நோயை அகற்றியவர்களும் உண்டு.

உண்மையான பனம் சாராயத்தை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களும், பனை அபிவிருத்திச் சபையுமே ரசாயன முறைப்படி தயாரித்து விற்கின்றன என்பதே உண்மையாகும்.

# கொழும்பு மாநகரில் கற்பக நிறுவனங்களின் கலந்துரையாடல்

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் ஜனவரி மாதம் 28, 29 ஆம் திகதிகளில் கொழும்பில் விஜயராம மாவத்தையிலுள்ள விவசாய ஆராய்ச்சி மண்டபத்தில் நடைபெற்ற வெளிநாட்டு, உள்நாட்டு பனம் பொருள் அபிவிருத்தி ஆராய்ச்சி நிபுணர்களின் மாநாட்டில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது வெளிப்பட்ட கருத்துப் பரிமாறல்களின் சுருக்கத்தையும் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளையும் அங்கத்தவர்கள், வாசகர்களின் அறிதலுக்காக கட்டுரை வடிவில் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது.

காலத்தால் முற்பட்ட கற்பக தருவின் பயன்பாடு பற்றி பண்டைய காலத்து இலக்கியங்களில் கூறப்பட்டு இருப்பினும் அதன் பயனை மக்கள் முழுமையாக இன்னமும் பயன்படுத்த முடியாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இந்நிலையில் இதன் பயன்பாடு முழுவதையும் மக்கள் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் உருவான நிறுவனங்களே, தெங்கு பனம்பொருட் சங்கங்கள், பனை அபிவிருத்திச் சபை, ஏற்றுமதிக் கொம்பனிகள், மகளிர் குழுக்கள் என்பனவாகும். இந் நான்கு அமைப்புகளும் பனையின் மூலம் பெறக்கூடிய உற்பத்திகளை நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மக்கள் விரும்பும் வகையில் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பது பாராட்டிற்குரியதாயினும், அவை உருவான காலப்

பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலையால் தமது நோக்கை இலகுவில் அடைய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தமை துரதிஷ்டவசமானதே.

இந்நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்நான்கு நிறுவனங்களின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் பனை அபிவிருத்திச் சபையின் தலைவரும் தெங்கு பனம்பொருட் சங்கங்களின் சமாச செயலாளருமான திரு. K. நடராசா அவர்கள் கொழும்பில் விஜயராம மாவத்தையிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலைய மண்டபத்தில் ஓர் கலந்துரையாடலுக்கு ஒழுங்கு செய்து இந்நிறுவனங்கள் தொடர்பான உள்நாட்டு, வெளிநாட்டு உயர் அதிகாரிகளை வரவழைத்து, நிறுவனங்களின் பிரச்சினைகளையும் அவை எதிர்காலத்தில் செய்யவிருக்கும் புனர்நிர்மாண நடவடிக்கைகள்பற்றியும், திட்டங்கள் பற்றியும், அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த ஏற்படும் தடைகள்பற்றியும் வெளிக்கொணர வைத்ததுடன், அவற்றிற்கான ஆலோசனைகளையும், உதவிகளையும் பெறுவதற்கான வழியை வகுத்து வைத்தமையை பாராட்டாமல் இருக்க முடியாது.

இக் கலந்துரையாடல் இருநாட்கள் நடைபெற்றிருப்பினும் முதல் நாளில் பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தியும், ஆராய்ச்சிபற்றியும் அதனால் ஏற்பட்ட பலாபலன் பற்றியும் அபிவிருத்தி உத்தியோகத்தரும், ஆராய்ச்சி உத்தியோகத்தரும் விளக்கமளித்தனராயினும் அவர்களின் செயல்பாடுகளை மேலும் அதிகரிக்க ஆராய்ச்சிக்கான வசதிகளின் பற்றுக்குறை தடையாகவுள்ளதை அவர்களின் பேச்சுக்களில் இருந்தும் கலந்துரையாடலின்போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களில் இருந்தும் அறிய முடிந்தது. இருப்பினும் பனையிலிருந்து உற்பத்தியாக்கப்படும் போசாக்கு உணவுப் பொருட்கள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் இதனால் நாட்டின் வலிமையுடைய அறிவுடைய ஓர் சமுதாயத்தை உருவாக்க முடியுமென்றும் டாக்டர் பொன்னு விக்னராஜா கூறியதுடன் இவ்வுற்பத்திக்கான செலவில் ஓர் பகுதியை வெளிநாட்டு நிறுவனம் மூலம் தன்னால் பெற்றுத்தர முடியுமெனவும் தனது கருத்தில் மிகவும் தெளிவாக விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து தெங்கு பனம் பொருட் சங்கங்களின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்நிறுவனங்களின் சார்பில் பல பொது முகாமையாளர்களும், தலைவர்களும், பல்வேறு திட்டங்களை முன்வைத்தனர். அவற்றுள் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்கள்

எவை எனவும் அவற்றைச் செய் வதற்கான தடைகள் பற்றியும் கூறியதுடன் எதிர்கால திட்டம் பற்றியும் அவற்றினை செய்வதற்கு ஏற்படும் தடைகளைப்பற்றியும் தெரிவித்ததுடன் அவற்றைச் செயல்படுத்த உதவியும், ஆலோசனைகளும் கோரப்பட்டது. சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன அவையாவன:

1. விபத்து நிதியை கூட்டுவதுடன் விபத்துக்காளானவரின் குடும்பத்தின் மறுவாழ்விற்கு ஏற்ற வசதிகளை செய்துவழங்கல்.

2. காணியற்ற தொழிலாளருக்கு அரச காணிகளை பகிர்ந்து வழங்கி வீடமைத்துக் கொடுத்தல்.

3. அங்கத்தவரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கி கல்வி கற்க வசதி செய்வதுடன் தொழில் வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

4. வரணி, கைதடி, சங்கானை வடிசாலைகள்போல பாலை வடி வடிசாலைகளை தீவுப்பகுதிக்கும், வன்னிப்பிரதேசத்திற்கும் அமைத்துக் கொடுத்து கள் அகற்றும் பிரச்சினையை நீக்க வேண்டும்.

5. 1988ம் ஆண்டு வரையிலான விற்பனை வரியையும், கலால் பகுதியினரால் அறவிடப்படும் குற்றத்தையும் நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். வன்னிப் பிரதேசத்தில் அறவிடப்படும் குத்தகை வரியையும் 1988ம் ஆண்டு வரைக்குமாவது அறவிடாமல் தடுப்பதுடன் இங்குங் கூட்டுறவு முறையைக் கொண்டுவரல் வேண்டும்.

6. தொழிற் பாதிப்புக்குள்ளான உண்மையாகப் பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கு ரூபா 4000/ உடன் கிடைப்பதற்கான உதவிகளை செய்துதரல் வேண்டும்.

7. சடந்தகால கலவரத்தால் சொத்துக்களை இழந்த சங்கங்களுக்கு சேர்க்கியுள்ள நிதியை மிக விரைவில் கிடைப்பதற்கு ஆவன செய்துதரல் வேண்டும்.

8. சகல சங்கங்களுக்கும் வெளிநாட்டு, உள்நாட்டு மதுபான விற்பனை நிலையங்கள் அமைக்க அமைப்புப் பத்திரம் வழங்கல் வேண்டும்.

9. சங்கங்கள் உற்பத்திப் பொருட்களை மாற்றம் செய்வதற்கு வாகன வசதி செய்துதரல் வேண்டும்.

10. சமாச மட்டத்தில் ஓர் தனியார் வங்கியை அமைப்பதற்கு மக்கள் வங்கி மூலமான உதவிகளைப் பெற்றுத் தரல் வேண்டும்.

11. சமாசத்தினது தொடர்புகளும் நடவடிக்கையும் அதிகரிக்கப்படவுள்ளதால் சமாசத்திற்கு வாகனவசதி பெற்றுத் தரல் வேண்டும்.

12 சமாசம் செய்யும் காகிதாதி விற்பனையை அதிகரிக்கவும் கற்பகம் பத்திரிகையின் தரத்தை உயர்த்தவும், ஓர் அச்சுக்கூட வசதியை பெற்றுத்தர வேண்டும்.

13 ஊழியர்களின் சம்பளம் மாற்றியமைக்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த வழிசெய்தல் வேண்டும்


14. பனையின்மூலம் உற்பத்தி செய்யும் ஏனைய பொருட்களின் உற்பத்தியையும், தரத்தையும் உயர்த்த ஊழியர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியும், புலமைப் பரிசிலும் வழங்கி ஊக்குவிக்க வேண்டும்,

இவ்வாறான கோரிக்கைகள் முன்வைத்து உரையாற்றப்பட்டிருப்பினும் இக்கோரிக்கைகள் சங்கங்களினது நிதிப் பற்றுக்குறைவினாலேயே நடைமுறைப்படுத்துவதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பது சுட்டிக்காட்டப்பட்டது. கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஏனைய மூன்று நிறுவனங்களும் தங்களது அபிவிருத்தியை தெங்கு பனம்பொருள் சங்க வளர்ச்சியின் மூலமே கூடுதலாக பெருக்கலாம். காரணம் அங்கத்தவர்களே மூலப்பொருள் உற்பத்தியாளர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. எனவே இச்சங்கங்களின் வளர்ச்சியிலேயே பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்த வாய்ப்பு உண்டு என்பதனை யாரும் மறுக்க முடியாது. இந்நிலையில் தெங்கு பனம் பொருட் சங்கங்கள் அரச மானியம் பெறும் நிறுவனங்களாக மாற்றி அமைக்கப்படல் வேண்டுமென்பது பலரது கருத்தாக ஒலித்தமையைக் காணக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு நடந்த முதல்நாள் கலந்துரையாடலின் இறுதியில் பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசகர் திரு. T. திருலிங்கநாதன் அவர்கள் மறக்கமுடியாத இனிமையான தொகுப்புரையுடன் இனிது முடித்ததுடன் மறு திட்டங்களை குழுவாக இணைந்து வழங்கவேண்டும் எனவும் ஒரு கோரிக்கையை முன் வைத்தார்

இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் போது காலையில் முதல் நாள் தெங்கு பனம் பொருட் சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகளையும், திட்டங்களையும் எழுத்து மூலமாக வழங்கியபின்னர் இக்கோரிக்கைகளில் சிலவற்றை உடனடி நடவடிக்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை உயர் அமைச்சின் செயலாளர்கள் செய்வதற்கு உறுதியளித்தமையை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது மேலும் சிலவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு பனை அபிவிருத்திச் சபையின தலைவர் முயற்சிகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

இந்நிலையில் தொடர்ந்து, பனை அபிவிருத்திச சபையின் நிர்வாக



கருத்தரங்கில் கலந்துகொண்ட வடமாகாண பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் கூ. ஆ. உ. ஆணையாளர் திரு. ஜே. அலபோன்ஸ், பனை அபிவிருத்திச் சபையின் தலைவரும் சமாச செயலாளருமான திரு கே. நடராசா ஆகியோருடன் காணப்படுகின்றனர்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட தலைவர்கள் அட்டைப் படத்தில் காணப்படுகின்றனர்.

உறுப்பினர் திரு. எஸ். பாலசிங்கம் அவர்கள் சில திட்டங்களை யும் ஆலோசனைகளையும் முன் வைத்து விளக்கமளித்தார்.

தொடர்ந்து ஏற்றுமதிக் கொம்பனியின் செயற்பாடுகள் பற்றியும் அதன எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் அவற்றிற்கான ஒத்துழைப்பைத் தரும்படியும் மிக விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் தற்போது வடபகுதியில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் விதவைகளாக்கப்பட்ட பெண்களுக்கு ஊதியம் வழங்கும் நோக்குடனும் பனைக் கைப்பணிப் பொருட்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் மகளிரிடையே ஓர் சேமிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தும் நோக்குடனும் மகளிர் அமைப்பை உருவாக்கி அதன் விஸ்தரிப்பு பற்றியும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் இவ் அமைப்பின் அமைப்பாளரும் பனை அபிவிருத்திச் சபையின் உதவி உற்பத்தி உத்தியோகத்தருமான திரு. வீ. ஜி. தங்கவேல் சிறப்பான உரை ஒன்றை ஆற்றியதுடன் இவ் அமைப்பின் விஸ்தரிப்புக்கு தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் உதவ வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

இவ்வாறான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் மத்தியில் சில தீர்மானங்களும் முன்வைக்கப்பட்டு அவை சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவையாவன:-

1. இந்நிறுவனங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக திரு. க. நடராசா அவர்களையே தொடர்ந்தும் தலைவராக இருக்க அனுமதிக்க வேண்டுமென எமது கௌரவ ஜனாதிபதியையும் வடக்கு, கிழக்கு மாகாண சபையையும் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது

2. தெங்கு பனம்பொருட் சங்கங்கள், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் போன்று கிழக்கு மாகாணத்திலும் தெங்கு பனம் பொருள் சமாசம் உருவாகுவதுடன் ஓர் வட-கிழக்கு தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சம்மேளனம் அமைக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறான தீர்மானம் நிறைவேறியதுடன் இரண்டாம் நாள் தொகுப்புரை நிகழ்ச்சி நடைபெற்றதைத் தொடர்ந்து கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்கள் கலைந்து சென்றனர்.

எவ்வாறாயினும் இக்கலந்துரையாடல் 1989ம் ஆண்டின் பனம்பொருள் அபிவிருத்திக்கான ஒரு திருப்புமுனையென்பதுடன் இந்நிறுவனங்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டி முன்வந்து கலந்து அறிவுரைகள் ஆற்றியும் ஆலோசனைகள் வழங்கியும் உதவிய அமைச்சின் செயலாளர்களுக்கு நாம் நன்றியுடையவர்களாவதுடன், இந்நிகழ்ச்சியை பல்வேறு சிரமத்தின் மத்தியில் ஒழுங்குபடுத்தியதுடன் எமது கோரிக்கைகளை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ள பனை அபிவிருத்திச் சபைத் தலைவரைப் பாராட்டி எமது எதிர்பார்ப்புகள் எந்த அளவிற்கு நிறைவேறும் என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

தொகுப்பு: கி. சிவநேசன்



"வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க."

25 மில்க்வைற் நீலசோப்

மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி

அழகிய மூவர்ண திருவள்ளுவர் படம்

ஒன்றைப்

பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆரோக்கிய வாழ்விற்கு பனை வெல்லம் பாவியுங்கள்.

நாளும் நற்பணி செய்திட

உங்கள் ஆதரவை நாடும்

"மில்க்வைற்"

# செம்பியன் செல்வன்

எழுதும்

# இந்திரஜித்

● தொடர் நாடகம்

## 2

[ஆதிசேஷனின் அரண்மனையை அண்டிய அந்தப்புரம்—மாலைவேளை மஞ்சள் வெயிலில் பொன் வேய்ந்திருக்கிறது. இளந்தென்றல் திரைச்சீலைகளைத் தழுவித் தழுவி மோன ரகஸ்யங்களை உயிர்க்கலங்களிடையே பாவ விட்டுக் கொண்டிருக்க...எங்கிருந்தோ ஒரு நாகணவாய் புள் கூவுகிறது... வசந்த கோகுலத்தின் 'குக்கூ...குக்கூ' ஜோடிப் புருக்கள்... தங்களிடையே 'ச்குப் ...க்கும்...'... இறகுகள் அடித்து... மயில் அகவும் ஓசை... தேன் குடிக்கத் துடிக்கும் வண்டின் ரீங்காரம்...

உப்பரிகையின் கலாதர் வழியாக சுலோச்சனை இயற்கையின் இன்பலீலைகளில் மூழ்கிப்போய் மெய்மறந்து நிற்கிறாள். திடீரென நெஞ்சின் ஆழத்திலிருந்து நீண்ட பெருமூச்சுகள் எழுகின்றன.

'கலகல' வென முத்துதிர்த்தாற் போல .. நாகமணிகள் சிதறியதெனச் சிரிக்கிறாள்.]

தோழி: (ஆச்சரியத்துடன்). இளவரசி! எதைக் கண்டு சிரிக்கிறீர்கள்?

சுலோச்சனை: ஒரு நினைப்படி தோழி...

தோழி: அது என்னம்மா...... அப்படிப்பட்ட நினைப்பு? நினைத்து நினைத்துச் சிரிக்கும் சிரிப்பு?... அது ஆபத்தம்மா?...

சுலோச்சனை : (வியப்புடன்) என்ன? சிரிப்பது ஆபத்தா?...

தோழி: (போலிப் பயத்துடன்) ஆமாம்மா! .. பெண்கள் சிரிப்பது ஆபத்துத்தான். அதுவும் பருவப் பெண்கள் தனித்திருக்கும் போது தமக்குள் சிரிப்பது மகா ஆபத்தம்மா?

சுலோச்சனை : யாருங்கடி ஆபத்து...?

தோழி: யார் சிரிக்கிறார்களோ?... யாரை நினைத்துச் சிரிக்கிறார் களோ... அவர்களுக்கு ..

சுலோச்சனை: (போலிக் கோபத்துடன்) போடி... நான் நினைத்துச் சிரித்தது...

தோழி: (அவசரத்துடன்) யாரை... எதை... எண்ணிச் சிரித்தீர்க ளம்மா?...

சுலோச்சனை: இந்த மலர்களை வேட்டையாடி மதுவுண்ணும் வண் டுகளை...

தோழி: (அலட்சியத்துடன்) இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கி றது?

சுலோச்சனை: இல்லையடி... இந்த வண்டுகளுக்குத்தான் என்ன அவ சரம்... ஆத்திரம் பார்த்தாயா?... ஒரே பூவிலேயே எத்தனை தரம் மதுவருந்தத் துடிக்கின்றன பார்... காலை மாலை என்று வேறுபாடே கிடையாதா?... என்று எண்ணினேன். சிரிப்பு வந்துவிட்டது...

தோழி: (அலட்சியத்துடன்) ப்பூ!... இவ்வளவுதானா... மதுகரனுக்கு என்ன காலநேரம் புரியப்போகிறது . முழு வெறியனாச்சே...

சுலோச்சனை: சரியடி! வண்டுகளுக்குத்தான் வெறி...மயக்கம்... இந் தப் பூவினங்களின் குதூகலம பார்த்தாயா?...

தோழி: மலரும்... மங்கையும் ஒன்றம்மா தங்களை தங்கள் நாயக ருக்கு அர்ப்பணிப்பதில்... இழப்பதில் பெருமை கொள்ளும் இனங்களம்மா?

சுலோச்சனை: என்றாலும் ஒரு குடிகாரனுக்காகவா?...

தோழி: குடிகாரனெண்டாலும் கொண்டவனம்மா... பெண்மையை உலகறிய பெருமை கொள்ள வைப்பவனல்லவா?...

சுலோச்சனா: எந்த விஷேட குணங்களும் இல்லாத ஒருவனுக்கே இந்தளவு பெருமை என்றால்... அவரைப்போன்ற மூவுலகம் போற்றும் வீரனுக்கு...விவேகிக்கு...அழகனுக்கு... எவ்வளவு பெருமை இருக்கும்?...

தோழி: (ஆவலுடன்) யாரம்மா?...அந்த மாவீரன் பேரழகன்...

சுலோச்சனா: (வெட்கத்துடன்) போடி!... அவர்தானடி...

தோழி: யாரம்மா?

சுலோச்சனா: உனக்கா தெரியாது?... இன்று வீரர்கள் மத்தியிலே வீரத்தின் சிகரமென நிற்பவரை தெரியாது உனக்கு?.. பெயர் கேட்டாலே பகைவர் நடுக்கமுறும் அந்த விறல் வீரரைத் தெரியாது..? இளம் கன்னியர் உள்ளத்திலே புகுந்து கலகம் விளைவிக்கும் காளையை உனக்குத் தெரியாது..?

தோழி: அப்படியென்றால் . (யோசித்து) இராவணேஸ்வரன் மைந்தன்... திராவிடகுலக் கொழுந்து .. மேகநாதனா..?

சுலோச்சனா: போடி அவர் பெயரை இப்படியா சொல்வது... இந்திரனையே கதிகலங்க வைத்து, சித்தி பல பெற்ற இந்திரஜித்தன் என்று கூறடி. !

தோழி: (அச்சத்துடன்) அம்மா... ஆபத்தம்மா... அவர்கள் பெண்களை வெறும் போகப் பொருளாகப் பார்ப்பவர்கள்

சுலோச்சனா: போடி... பைத்தியக்காரி . வீரர்களால் ஆளப்படுவதும் பின்பு அவர்களையே ஆண்டு கொண்டிருப்பதும்தான் உத்தம பெண்களின் குணமடி... ஆண்கள் ஆத்திரக்காரர்கள்... அவசரக்காரர்கள்... இளமையின் மதம் கொண்ட யானைகள்... பெண்களிடம் இருக்கும் அச்சம், மடம், நாணம் பயிர்ப்பு ஆகிய படைக்கலங்கள் அவர்களை அடக்கி ஆளும் அங்குசங்கள்... எங்களின் கையாலாகாத்தனத்தை ஆண்களின் மீதா பழியாக போடுவது...?

தோழி: (காதுகளைப் பொத்தியவாறு) போதுமம்மா ..போதும்... இதற்குமேல் உங்களிடம் விளக்கம் கேட்டால்

சுலோச்சனா: கேட்டால்...?

தோழி: நானே இந்திரஜித்துவை காதலிக்கத்தொடங்கிவிடுவேன்...

[இருவரும் சிரிக்கிறார்கள். இன்னொரு தோழி அவசரமாக உள்ளே வருகிறாள்.]

வந்தவன்: இளவரசி...நாகநாட்டு மன்னர்... உலகளந்த பெருமானின் சயன அலந்தர் உங்கள் தந்தை ஆதிசேஷன் அவசரமாகத் தங்களைக் காண வந்துகொண்டிருக்கிறார்......

சுலோச்சனை: அப்படியா...

[தந்தையை வரவேற்க வாசல்வரை ஓடுகிறாள். ஆதிசேஷன் பரபரப்புடன் வருகிறான்.]

ஆதிசேஷன்: மகளே!... சுலோச்சனா?

சுலோச்சனை: தந்தையே! ஏனிந்த அவசரம்?...

ஆதிசேஷன்: மகளே என்னைக் கடமை அழைக்கின்றது.

சுலோச்சனை: உங்கள் கடமையை என்றுதான் மறந்தீர்கள்? .. உங்கள் ஆயிரம் தலையாலும் புவுலகையே அயராமல் . கண் துஞ்சாமல் தாங்கி நிற்கிறீர்களே?... அதனால்தானே மூவுலகையும் ஈரடியால் அளந்த பெருமாள் உங்களையே சப்ர மஞ்சமாக்கிக் கொண்டார்? அவரின் உள்ளக் கிடக்கையை திருமகளுக்கு அடுத்ததாக அறிந்து கொண்டோர் உங்களைத் தவிர யார்...? அதுசரி... நீங்கள் அவசரமாக ஏதோ சேகி கொண்டு வந்தீர்கள்... நான் அதை விடுத்து ஏதேதோ பேசுகிறேன்...

ஆதிசேஷன்: (பரிவுடன் அவளை நோக்கி) ஆமாம் மகளே .. உன்னைச் சிறிது காலம் பிரிந்து இருக்க நேரும் போல் தெரிகிறது...

சுலோச்சனை: (கவலையுடன்) அப்பா... எமக்குள் பிரிவா?... உங்களைப் பிரிந்து எப்படி நான் வாழ்வேன்...?

ஆதிசேஷன்: (அவள் தலையை வருடியபடி) மகளே!.. தந்தை மகளைப் பிரிவதற்காகக் கலங்கலாம்... ஆனால்...மகள் அப்படிக் கலங்கக் கூடாது?...

சுலோச்சனை என்ன தந்தையே கூறுகிறீர்கள்?...

ஆதிசேஷன்: ஆமாம் மகளே... பெண்கள் என்னதான் பிறந்த வீட்டில் செல்லமாக வளர்ந்தாலும் .. அவள் இன்னொரு வீட்டிற்குத்தான் சொந்தமாகப் போகிறவள்...

சுலோச்சனை: அதனால் ..

ஆதிசேஷன்: பிரிவு என்பது பெண்களின் பிறப்பால் நேர்ந்துவிட்ட நியமம். இதனை மீற முடியாது. வெல்ல முடியாது. இதனை

மீறவோ... வெல்லவோ முயன்ற பெண்கள் எல்லோருமே தோற்றுத்தான் போயினர்...

சுலோச்சனை: (உறுதியுடன்) எது எப்படியிருந்தாலும்... நான் ஒரு போதும் உங்களைவிட்டுப் பிரிந்து போகேன்...

ஆதிசேஷன்: (சிரித்து) சரி... பார்க்கலாம்.. இன்று நீ என்மீதுள்ள பாசத்தால் இப்படிக் கூறலாம். பாசத்தையே வெல்லுகின்ற உறவு ஏற்படும்போது.. அப்போது பார்க்கிறேன் உன் உறுதியை..

சுலோச்சனை: சரி சரி... இன்னமும் வந்த விடயத்தைக் கூருமல்...

ஆதிசேஷன்: ஓ!... வந்த விடயமா?... இன்று முப்பத்து முக்கோடி தேவர்களினதும், ரிஷிகளினதும், ரிஷிபத்தினிகளினதும் பிரதிநிதிகளாக சிலர் பெருமானைத் தரிசிக்க வந்திருந்தனர்... அவர்கள் அனைவரும் திராவிட மண்ணின் மன்னன் இராவணேஸ்வரனின் அக்கிரமங்களைப் பொறுக்கமாட்டாமல்...

சுலோச்சனை: (அவசரமாக) இராவணேஸ்வரனின் அக்கிரமங்களைத் தானே கூறினர்கள். அவர் மைந்தனுடையதல்லவே...?...

ஆதிசேஷன்: (சந்தேகத்துடன்) இல்லை... இல்லை... ஆனல் ஏன் இப்படிக் கேட்கிருய்...? ..

சுலோச்சனை: ஒன்றுமில்லைத் தந்தையே... நீங்கள் சொல்லுங்கள்...

ஆதிசேஷன்: (சந்தேகப் பார்வையுடன்) இன்று ஏனே நீ அதிகம் உளறுகிருய்...... போகட்டும்.. என்ன சொன்னேன்... பெருமானிடம் அடைக்கலம் கோரி ரிஷிகள், தேவர்கள் வந்தார்களா... அவர்களுக்கு ஆபத்பாந்தவன் அஞ்சேல் என்று அபயக்கரம் காட்டிவிட்டார்...

சுலோச்சனை: அதற்கும் நீங்கள் என்னைப்பிரிவதற்கும் என்ன சம்பந்தம்...?

ஆதிசேஷன்: (பெருமையுடன் சிரித்து) என்ன சம்பந்தமா?... வேடிக்கையான கேள்வி. எம்பெருமாள் எடுக்கும் தீர்மானங்களில்... முடிவுகளில் நானில்லாமலா?...

சுலோச்சனை: (கேலியாக - கொஞ்சலுடன்) போதும் தந்தையே தங்கள் தற்புகழ்ச்சி... பெருமாள் எடுத்த முடிவுதான் என்ன?

ஆதிசேஷன்: அதை இன்னும் சொல்லவில்லை; பார்த்தாயா?...

[பேசவாய் எடுக்கும் பொழுது - எங்கிருந்தோ அந்தக கானம் எங்கும் நிறைகிறது நாதப பெரு வெள்ளம் திடீரெனப் பெருகிய காட்டாறு போல் எல்லோரையும் நாதப் பிரவாகத்தில் திக்கு முக்காட வைக்கிறது .. எங்கும் மோனலயம் சுநாத அலைகள்... சுழிப்புகள்...]

சுலோச்சனை: ஆ!... என்ன கானம் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் கானம் யார் இசைப்பது? கந்தர்வ கானமா?... கிம்புருட கின்னரர்கள் மீட்டும் இசையா?...

[கானத்தின் ஓசை அதிகரிக்கிறது]

ஆதிசேஷன்: எங்களையே எங்களிலிருந்து பிரித்து ஏகாந்த வெளிக்கு அழைத்துச் செல்லும் இந்த அற்புத இசைவாணன் யார்... (யோசித்து) வேறுயாராக இருக்கும் ..' (சிரித்து) மகளே... சுலோச்சனை நீ யார் கானத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறாய் தெரியுமா?

சுலோச்சனை: யார் கானம் தந்தையே ..?

ஆதிசேஷன்: வேறு யாருடையதுமல்ல... கானவெள்ளம் நாரதருடையது. நாராயணனை அழைப்பதும் நாத இசையில் அவனைத் தரிசிக்கும் நாத முனியினுடைய கானம் வேறு எவ்வாறு இருக்கும் மகளே...?

சுலோச்சனை: (ஆவலுடன்) தந்தையே அவர் எங்கள் இருப்பிடம் தேடித்தான் வந்து கொண்டிருக்கிறாரோ?...

ஆதிசேஷன்: அப்படித்தான் நினைக்கிறேன். காரணமில்லாமல் அவர் காலடி எங்குமே படாது இல்லை. ஏதோவொரு திட்டத்துடன்தான் வந்து கொண்டிருக்கிறார் .. கானமிசைப்பதும் கலகம் விளைப்பதும்தான் அவர் தொழிலாச்சே... இங்கு என்ன கலகம் ஏற்படுத்தப் போகிறாரோ?...

சுலோச்சனை: இதென்ன பேச்சு தந்தையே? இத்தகைய மாபெரும் கலைஞர் கலகம் விளைப்பாரா?...

ஆதிசேஷன்: (உறுதியுடன்) கலைஞர்கள் தான் கலகம் விளைப்பவர்கள். தங்களுக்கிடையே மோதிக்கொள்வார்கள்...

சுலோச்சனை: (அதிர்ச்சியுடன்) தந்தையே!..

ஆதிசேஷன்: (சிரித்து) மகளே நீ அஞ்சாதே!... ஆத்திரமும் படாதே.. கலைஞர்கள் கலகம் மூட்டுவதும்... அதற்குள் தாங்களே அகப்பட்டுத் திணறுவதும் மக்களின் நல்வாழ்வுக்காகத்தான்... மக்களை விழிப்படையச் செய்யத்தான்... நல்லது எது என்பதனை அவர்களே உணரவைக்கத்தான்... அவர்கள் உண்மையை உணரும் வரை கலைஞர்கள் கலகக்காரர்கள் அமைதியைக் குலைப்பவர்கள்தான்...

[நாரதர் வருகிறார்.]

நாதப்பெருஞ்சுனையே .. நாதமுனிகளே... வரவேண்டும்... வரவேண்டும்... மும்மூர்த்திகளையும் கவரும் கானத்தை கேட்க வைத்த வள்ளலே வரவேண்டும் .. இந்த ஆசனத்தில் அமர வேண்டுகிறேன்..

[சுலோச்சனை பணிவுடன் வந்து வணங்குகிறாள்.]

நாரதர்: (ஆசீர்வதித்து) மங்களம் உண்டாகட்டும்... விரைவில் உனக்கேற்ற மணவாளன் வந்து கைப்பிடிக்கட்டும்...

ஆதிசேஷன்: நல்லது நாரதரே!... தங்களின் திடீர் விஜயம் என்னவோ?

நாரதர்: விசேடம் ஒன்றுமில்லை... உன்னைச சந்தித்து நீண்ட நாட்களாகிவிட்டதா ... அதுதான் பார்த்துப் போவோம் என்று புறப்பட்ட நான் வழியில் தெரியாமல் இலங்காபுரி மண்ணில் கால் வைத்துவிட்டேன் ..

ஆதிசேஷன்: (ஆத்திரத்துடன்) அவன் .. அந்த இராவணன்... உங்களை ஏதும் துன்புறுத்திவிட்டானா? ..கட்டிப்போட்டானா?...

நாரதர்: (சிரித்து) அடடா!... ஆதிசேஷா... அமைதி.. அமைதி... அவன் அன்பால் என்னைக் கட்டிபபோட்டான்... தன் இசையால் என்னை மயக்கியதோடல்லாமல்.. நாணப்படவும் செய்து துன்புறுத்திவிட்டான்... ஆஹா... எப்பேர்ப்பட்ட இசைஞானி... அவன் கோட்டை வாசலில் பறப்பது எது தெரியுமா... வீரக் கொடியல்ல ... வீணைக்கொடி ..

ஆதிசேஷன்: (பற்களைக் கடித்தபடி) ஆ! ...அந்த அரக்கனையா புகழ்கிறீர்கள்?

நாரதர்: (சிரித்து) ஆதிசேடா .. உண்மை புரியாமல் உளறுதே!... நீ மட்டும் இலங்காபுரியை பார்த்திருக்கவேண்டும்...நீ திரும்பி

நாகநாடு வரவே மறுத்திருப்பாய்...பார்க்கும் திசையெல்லாம் திருமகளின் கடாட்ஷம் கேட்கும் ஒலிகளெல்லாம் நாமகளின் அமுதவெள்ளம்...ஆதிசேடா ஒன்று சொல்வேன் கேள்... தேவர்கள் அமுதையுண்டு சிரஞ்சீவியாக வாழ்கிறார்கள் என்றால் இலங்காபுரி மக்களோ தமிழ் என்னும் அமிர்தத்தை உணர்வால்...நாவால்...நினைப்பால் உண்டு உண்டு என்றும் இளமையாய் ..இருக்கின்றார்கள் நாகமன்னா!...நீ நம்பமாட்டாய்... 'ஆடுநர் பாடுநராகிக் கவல்கின்றார் ஒருவரைக் காணேன்'.

ஆதிசேஷன்: நிறுத்தும் நாரதரே! அரக்கன் ஒருவனைப் புகழ்வதைக் கேட்க வெறுப்பாக உள்ளது...

நாரதர்: இராவணனையா அரக்கன் என்கிறாய்...? மூவுலகெங்கணும் தேடினாலும் கிடைத்தற்கரிய கலைஞனப்பா அவன்...

ஆதிசேஷன்: கலைஞனாக இருக்கலாம் ஆனால் கொடூர மனம் படைத்த அரக்கன் என்பதில் தங்களுக்கு மறுப்பில்லையே...

நாரதர்: அப்படி நான் எண்ணவில்லை...பாறைகளில் மலர்கள் மலர்வதில்லை...செந்தமிழும் செழுங்கலைகளும் செங்கோலோச்ச... வீரமும் விவேகமும் கலந்துறவாட... பார்க்குமிடமெல்லாம் செந்நெல்லும் செங்கரும்பும் கலந்து விளைந்திட.. கனியுடன் தேனடை கலந்து பொலிந்திட....ஆஹா...ஆஹா...விண்ணகரம் கெட்டது போ!..

ஆதிசேஷன்: நாரதரே.. எனது நாகமணிக்கூட்டத்தை விடவா... இதன் குப்பையின் பெருக்கத்தை விடவா அவன் செல்வம் பெரியது...?

நாரதர்: (சிரித்து) நிச்சயமாக...உன்னிடம் நாகமணிக்கூட்டங்களே உண்டு ஆனால் அங்கோ...முத்தொடு பவளமும்.. மூவகை இரத்தினமும்.. வைரம்...வைடூரியம் கோமேதகம்...புஷ்பராகம் என நவரத்தினங்களே காலிடறிவிழச் செய்கின்றனவே...

ஆதிசேஷன்: (காதுகளைப் பொத்தி) புகழ்ச்சி ..புகழ்ச்சி... புகழ்ச்சி... மேலான புகழ்ச்சி...நீர் ஒரு கலைஞர்...அதனால்தான் இராவணன் என்னும் கலைஞனைப் புகழ்கிறீர்.. நீர் புகழும் இந்தச் செல்வங்களெல்லாம் குபேரனையும், இந்திரனையும் தட்டிப் பறித்தவைதாமே?..

நாரதர்: ஆதிசேடா... நீ அறியாததொன்றுமில்லை.. மண், பெண், பொன் அனைத்துமே வீரர்களுக்கே உரியது நீ ஒன்றை மறந்து விட்டாய் இலங்காபுரியில் இவை எல்லாவற்றையும் விட மேலான செல்வம் ஒன்றுண்டு தெரியுமா?...

சுலோச்சனை: அது என்ன செல்வம் நாரத முனிகளே?

நாரதர்: (குறும்புடன்) அதுவா.. (தயங்கும் பாவனையில்) அந்தச் செல்வம் பற்றி உன்னிடம் எப்படி நான் கூறுவது? . உன் தந்தைக்குத்தானே இலங்காபுரி நாயகன் என்றால் எரிச்சல் எரிச்சலாக வருகிறது..

ஆதிசேஷன்: (எரிச்சலுடன்) பரவாயில்லை தொடங்கி ஆர்வத்தையும் தூண்டி விட்டீர்...நீர் வந்த காரணத்தையும் செயல்படுத்தாமலா போகப்போகிறீர்... நடத்தும் உமது நாடகத்தை..

நாரதர்: (பதறிய பாவனையில்) பார்த்தாயா பார்த்தாயா? உன் தந்தை என் மீது பழி போடுவதை இராவணன் தனது செல்வங்களின் மேலான செல்வமாகக் கருதுவது...தனது மைந்தன் மேகநாதனை...அதாவது இந்திரனையே வெற்றி கண்ட இந்திரஜித்துவை ..அவன் தந்தையை விஞ்சி விளங்கும் வீரன்.. இளமை கொஞ்சும் அழகன்... தவசீலன் .. தத்துவ விற்பன்னன்.. (அவளருகே சென்று மெலிந்த குரலில்) மணந்தால் நீ அப்படிப்பட்ட மாவீரனைத்தான் மணக்கவேண்டும்.

சுலோச்சனை: (சிரித்து) தந்தை சொன்னது சரியாய்ப் போய்விட்டது நீர் சரியான குறும்புக்காரர் . கலகக்காரர்...

நாரதர்: (சமாளித்து) சுலோச்சனை...உன்மனதிலும் நான் ஏதாவது கலகத்தை ஏற்படுத்திவிட்டேனா ..ஆதிசேஷா ஒன்றை மட்டும் புரிந்து கொள். நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பதை ..

ஆதிசேஷன்: (சிரித்து) நாரதரே இராவணனின் அக்கிரமங்கள் அழியப்போகின்றன .. அவன் செயல் கண்டு திருமாலே போர்க் கோலம் கொள்ள திருஅவதாரம் செய்ய இருக்கின்றார்...

நாரதர்: மண்ணுலகில் பிறப்பது யாவும் இறந்தே தீரும். இது நியதி. ஆனால் இறப்பால் எவர் புகழும் கீர்த்தியும் என்றும் அழிந்ததில்லை...அழியப்போவதுமில்லை... திருமாலே அவனுக்காக அவதாரம் என்றால் அவனை ஆட்கொள்ளப் போகிறார் என்று தான் அர்த்தம்...இதனால் அவன் புகழ் வையகம் நிலைத்திருக்கும் வரை நீடித்தே இருக்கப் போகிறது...

ஆதிசேஷன்: போதும் நாரதரே அவனுக்காகப் பரிந்து பேசுவது...?

நாரதர்: ஆதிசேஷா நீ அவன் மீதுள்ள பகையுணர்ச்சியால் அவன் பெருமையை உணராது பேசுகிறுய்...அவன் தன் திக்விஜயத்தின் போது உன் நாட்டின் மீது படையெடுத்து நாகர் குலமழித்து நாகமணிகளையும் கவர்ந்ததோடு உன்னையும் திறை கேட்டு வற்புறுத்தியது சீற்றத்தைக் கொடுத்துள்ளது.

ஆதிசேஷன்: நாரதரே.. உமக்கு ஒன்று சொல்வேன். கேட்டுக் கொள்ளும்.. திருமால் தனது திருஅவதாரத்தில் என்னையும் சேர்த்துள்ளார்... அப்போது நான் இவை எல்லாவற்றிற்கும் பழிவாங்காது விடேன்.

நாரதர்: (மர்மப் புன்னகையுடன்) நாராயணு...எனக்கு நேரமாகிறது...வரட்டுமா? சுலோச்சனே.. நான் வருகிறேனம்மா.. நான் உன்னை மீண்டும் சந்திக்கும் போது...(தடுமாறி) எங்கே...எப்படி...இதெல்லாம் யாரறிவார்.. எல்லாம் அவன் லீலை...

[போகிருர்]

— திரை —

---

# அன்பை அகிலம் அடைகவே!

எம். எஸ். அலெக்சாண்டர்

அன்பு என்ற ஒன்றையே
அறிந்து கொள்ளக் கூடுமேல்
இன்பம் என்று யாவையும்
எல்லவர்க்கும் இட்டுமே

அன்பு செய்யும் மக்களே
ஆர்க்கும் உதவும் மக்களாம்
துன்பம் நீங்கிப் போகுமே
தூய அன்பு மக்களால்

அன்பே சிவம் என்கினும்
அன்பு மொழிந்த யேசுவும்
அன்பின் வழி அல்லாவும்
அருள் பொழிந்த புத்தனும்

அன்பே காட்டிச் சென்றனர்
அன்பின் ஊற்றைக் காட்டினர்
இன்பம் எங்கும் பொங்கவே
அன்பை அகிலம் அடைகவே.

# உண்மையில்லாத உறவுகள்

அத்தியாயம் → 7

கே. வீ. என்.

"அன்னம், அன்னம், என்ரை அன்னம்...நீ எங்கையன்னம் போயிருந்தாய் இவ்வளவு நாளும்?...அன்னம் என்ரை..."

நெஞ்சின் நினைவில் தோன்றிய அன்னத்தை அந்தச் சுவரிலும் கற்பித சித்திரமாகக் கண்டு முத்தையர் வாய்விட்டு முனகிக் கொண்டது சரிதான் ஆனால் அவளிடத்திற்கு ஓடிச் சென்று அவளை ஆசையுடன் அணைத்தபடி அழுதுகொண்டே எல்லாவற்றையும் சொல்லிக் கொட்டிக் குமுறித் தீர்த்து விட வேண்டுமென்ற வேட்கையில் எழுந்திருக்க எத்தனித்தாரே, அது சரிதானா? தன்னிலை மறந்து திடீரென்று அவர் எழுந்திருக்க நினைத்து உன்னியபோது நாரி ஒத்துழைக்க மறுத்து 'தடாலென்று' கப்புடன் முதுகு அடிபட்டு விழுந்த போதுதான் முத்தையர் தனது முட்டாள்தனம் முழுவதையும் உணர்ந்து கொண்டார். உண்மையை முற்றாக உணர்ந்து கொண்டபோதிலும், நாரியில் ஏற்பட்ட நோவினால் கோபமே முத்தையருக்கு மேலிட்டது. அதனை மனத்தில் வைத்துக் கறுவிக்கொண்டே அன்னத்தை திட்டினார்.

'அன்னம், எடி அறுதலி...கண்டியாடி என்னை இஞ்சை இது கள் போட்டு படுத்திறபாட்டை... நீ கண்ணை மூடிக்கொண்டு.. தெய்வமாத் தேவதையாகி விட்டாய்.. என்னை ஏன்ரி என்னும் கொண்டுபோகாமல் வைச்சிருக்கிறாய்?...உன்ரை பேரப் பெடியள் வடிவாப் பார்க்குமெண்டு சொன்னியெடி அறுவாளே... வடிவாப் பார், பார்க்கிறாய் தானே?.. வடிவாப் பார்.'

முத்தையருக்கு என்னதான் ஆத்திரம் தலைக்கேறி அடிபட்ட நோவினால் அன்னப்பிள்ளையைத் திட்டிக் கொண்ட போதிலும், அந்த நோவும் ஆறிப்போக அவள்மேல் அவருக்கு அனுதாபமே ஏற்பட்டது. அதிலும் அடி நோவைக் காட்டிலும் இருதயத்தில் ஏற்பட்டிருந்த மனநோவைச் சொல்லி ஆறவே அவர் அன்னப்பிள்ளையை நினைத்ததும் - அவளுக்கு மனத்தால் உருவம் சமைத்து அதை அந்தச் சுவரில் கண்டதும், ஆனால் திடீரென்று

தான் உணர்ச்சிவசப்பட்டு இப்படி ஆகிவிட்டதை எண்ணி மிகவும் வருந்தினார் முத்தையர். அதனால் அவர் தன் முன்னே படுத்துக்கொண்டிருந்த அல்லியைப் பார்த்து இப்படிச் சொன்னார்.

"எண்டாலும் அல்லி... அவள் பாவம். அவள் என்ன செய்வாள்? அவள் உயிரோடை இருந்தால் என்னை இப்பிடியா சீரழிய விட்டிருப்பாள்? என்னர பொல்லாத காலம் சொல்லாமல் வந்து நிண்டு என்னைப் போட்டு லைக்குது... இஞ்சை கிடந்து அலைஞ்சுலைஞ்சு ஆறணியப்பட வேணுமெண்டு என்ரை தலையிலே அந்தக் குறுட்டுக் கடவுள் எழுதி வைச்சிட்டுது. இல்லையெண்டால் நல்ல புண்ணியஞ் செய்த சிவனெண்டால் அவள் போன கையோடையே அவளை முந்தானைச் சீலையைப் பிடிச்சுக்கொண்டு இந்தச் சீவன் போயிருக்காதே? அவள் புண்ணியவதி பூவோடும், பொட்டோடும் போவிட்டாள்... இஞ்சை கிடந்து மற்றவை சீருமல் சினக்காமல் 'சீ, தூ' வெண்டு காறிக் கனைக்கிறதுக்கிடையில அவள் போவிட்டதும் ஒண்டுக்கு நல்லதுதான்.

ஏனெண்டு கேக்கிறியா அல்லி... நானொரு ஆணாப் பிறந்தவனுக்கே இதுகள் இவ்வளவு மமதையும் சேட்டையும் விட்டுக் காட்டி ஆட்டி அசைச்சு வைக்கிதுகளெண்டால்... நான் உயிரோடை இல்லாமலுக்கு இருந்து அவள் போனமாதிரி நேர காலத்தோடை போயிருந்தனெண்டால்... இதுகள் அந்தப் பெண்ணாப் பிறந்தவளை உலிலை வைச்சுரிச்சு செய்யாத சிறுப்பினையெல்லாம் செய்து எவ்வளவு கொடுமைப் படுத்தியிருக்குங்கள். நல்ல வேளையாக தெய்வமும் அதைத் தெரிஞ்சுதான் அவளை நேர காலத்தோடை கூட்டிக் கொண்டு போவிட்டுது.

கேட்டியோ அல்லி, அன்னப் பிள்ளை... அவள் அன்னப் பட்சி தான் கண்டியோ. என்னெண்டாய்?... என்ன சிணுக்கம்?.. ஓ, உன்ரை ஆச்சியைத்தான் சொல்லுறன் ஏன் உனக்குத் தெரியுந் தானே அவளை?... இல்லை, இந்த மனிசரைப்போலை எல்லாத்தையும் மறந்திட்டியோ எண்டு பார்த்தன்.

சரி, கேளன் இதை, என்ன கேக்கிறியே?

மிரிச்ச இடத்துப் புல்லுக்கூட நோகாத அவளை நடை இருக்கே... அது அன்னப்பிள்ளையோடை கூடப் பிறந்தது. அது அன்ன நடைதான் கண்டியோ... பிள்ளை இந்த இராணி இருக்கிறாளே திடும் திடுமெண்டு பூமி அதிருகிற மாதிரி குதிச்சுக் குதிச்சு நடப்பாளே... அது பூமாதேவிக்கும் பொறுக்காது கண்டியோ. நானும் சொல்லுமளவும் சொல்லி கூடியவரைக்கும் தெண்டிச்சுப் பார்த்தன்... அவளை நடையைத் திருத்தலாமெண்டு. போடா சுக்கிமேனை எண்டிட்டாள். 'அன்னத்துன்ரை நடையை நடந்து காட்டப்போய் தன் நடையும் கெட்டுதாம்' எண்ட கதைமாதிரி என்ரை கதை ஆகிவிட்டுது... என்ரை நடையைத் திருத்திற

அளவுக்கு இதுகள் வந்திட்டுதுகள்...அன்னத்துக்கும் எனக்கும் இதுகளாலேதானே மனத்தாங்கல் வாறதும், அவள்ளை மயிரை நான் எட்டிப் பிடிக்கிறதும். அவளுக்குப் பேரப்பிள்ளைகளெண்டால் அளவு கடந்த செல்லம். பிள்ளை குட்டியளுக்கு சோத்துக்கும், துணிக்குந்தான் செல்லங் குடுக்க வேணும் கண்டியோ, மற்றதெல்லாத்திலேயும் வலு கண்டிப்பாக இருக்கவேணும். அன்னம் இதுகளுக்குக் குடுத்த அளவுக்கு மிஞ்சிய செல்லத்தாலைதான் இதுகள் இண்டைக்கு இப்பிடித் தலை கீழும் கண்டிமேனியமாக நிண்டுகொண்டு மற்றவையைப் பயமில்லாமலுக்குத் திரியிற தறுதலையாகி விட்டுதுகள்...

கேட்டியோ அல்லி, அதிலை ஒரு அதிசயமென்னவெண்டால்.. என்னெண்டு கேட்கிறியா?... இவள் அன்னம் சின்னஞ் சிறிசாக இருக்கையுக்கை ஒரு நேரச் சோத்துக்கும் ஒரு பழஞ் சீலைத் துணிக்கும் தான் பட்ட சிறுப்பிளையளை மறந்திட்டு இதுகளை இப்பிடி கண்கடை தெரியாமல் செல்லத்தைக் குடுத்து வளத்து விட்டதுதான் அந்தச் சங்கதி... அதை நினைச்சால்தான் ஆச்சரியமாக் கிடக்கு...

உனக்குத் தெரியாது அல்லி அப்ப நடந்த சங்கதியொண்டும்...என்ன கேட்கிறியோ?... அதைத்தான் சொல்ல வாறன்... இந்தச் சேனுவதிக்கும், ராணிக்கும்தான் அதுகளைப்பற்றி என்ன தெரியும்? அந்தப் பழைய கதைகளைச் சொன்னாலே பாம்பு மாதிரிச் சீறிப் பாயுதுகள். அந்தப் பிச்சைக்காரப் புத்திதானும் என்னட்டை இப்பவும் இருக்கெண்டு சொல்லிப் டகிடி பண்ணுதுகள்...

கேளன் பின்னை...என்ன கேக்கிறியே?...ம்

அன்னத்தை நான் தீவிலை இருந்து கூட்டிக் கொண்டு வந்து இஞ்சை குடியேறயுக்கை என்ரை கையிலை மடியிலை ஒரு செம்பாலடிச்ச சதக் காசுகூடக் கிடையாது எண்டு சொன்னால் ஏன் தலையை நிமிர்த்திப் பார்க்கிறாய்? என்ன அதிசயமாக் கிடக்கா?... சரி, அதுதான் போகட்டும், அன்னத்தின்ரை காதிலை, கழுத்திலை, மூககிலையாவது ஏதாவது மின்னிச்சிதோ எண்டாவது நினைக்கிறியா! அவள்ளை மூக்கிலை ஒரு மின்னிகூட இல்லையெண்டால் பார்த்துக் கொள்ளன். அவளுக்கோ எனக்கோ உடுத்த துணிககு பதில் துணி இல்லாமல்தான் இஞ்சை வந்து சேர்ந்தம். அப்ப எங்கடை தீவாங்கள் எப்பிடியெல்லாம் நாக்கு வளைச்சு நையாண்டிக் கதையெல்லாம் கதைச்சவங்கள் தெரியுமே? 'அன்னப்பிள்ளைக் கேற்ற அன்னக்காவடி தானெண்டும் அறுதலி பிள்ளையிலைதான் அம்பட்டன் சிரைச்சுப் பழகிறதெண்டும்'. என்னென்ன விதமாக மநஞ்சிலை இடிக்கிற மாதிரி நேருக்கு நேராகக்கூடி பகிடி சேட்டை விட்டவங்களெண்டால் பார்த்துக் கொள்ளன் எப்பிடிப்பட்ட கோமணக் குண்டியளாக இருந்திருப்பமெண்டு.

அந்த நேரத்திலை கையிலை மடியிலை காசு பணந்தான் இருக்க

வில்லை. சரி போகட்டும் விடு. எனக்கொரு ஆனபானதான— ஒழுங்கான வேலை வில்லட்டியா வது இருக்கவேண்டாமே? அது கும் தானில்லை. பின்னை ஊராக் கள் நளினம் பண்ணிக் கதைச் சதிலையும் பிசகில்லையெண்டு தானே நினைக்கிருய்? இப்ப அதுக்கென்னவோ மாருே நான்? இப்பநானும் அப்பிடித் தான் நினைக்கிறன் கண்டியோ? பூசைக் காரப் பெடியனுக ஊர் ஊராக வாய் பார்த்துக்கொண்டு திரிஞ்ச எனக்கு ஒரு பெண்ணும் வேணு மெண்டு நிண்டால் எப்பிடி இருக் கும் ஞாயம்? ஆரும் பகிடி பண் ணுவாங்கள்தானே.

ஆண்டிக்கு வாய்ச்சது அஞ்சும் பேயெண்டு ஏதோ ஒண்டு சொல் லுங்கள். அந்தக் கணக்காகத் தான் எனக்கு வாய்ச்ச அன்ன மும், அன்னத்தின்ரை குடும்ப மும். சாடிக்கேற்ற மூடியாகத் தானே குசவன் சரிக்கட்டி வைச் சிருப்பான். அஞ்சாறு பெட்டைக் குட்டியளுக்கை இவள் அன்னமும் ஒருத்தி. வரியத்திலை ஒரு நாளைக் காவது சோறு கறியை வயிறு நிறையத் திண்டிருக்குங்களோ எண்டிற சங்கதி ஐமிச்சம்தான். மற்றப்படி 'படைச்சவன் எதுவோ படியளக்காமலா விடுவான்' எண்டு சந்நியாசிப் பாஷை பேசிக் கொண்டிருந்த குடும்பம் கண் டியோ. எப்பிடியோ கடவுளிலை பழியைப் போட்டு கண்ணிலை உயிரைப் பிடிச்சு வைச்சுக் கொண்டு வாழ்ந்த குடும்பம்.

அதிலைதான் இவள் அன்னப் பிள்ளையும் ஒருத்தி. எவனுவது கட்டிக்கொண்டு போய் சோறுஞ் சீலையும் குடுத்துக் காப்பாத்தி ஞலே போதுமெண்டுநினைச்சிருந்த குடும்பத்திலை என்னையும் நம்பி ஒரு பெண்ணைத் தந்தாங்களெண் டால் பார்த்துக் கொள்ளன். சரி அதெல்லாம் போகட்டும், பழைய கதைகள். பசி வந்த உடையார் பழங் கணக்கைப் பார்த்த மாதி ரித்தான் இப்ப என்னையும் ஆரும் நினைப்பினம்.

ஆனல் அதிலை ஒண்டு மாத்தி ரம் சொல்லுவன். அதை நீ நம்பு. அதை நான் எனரை இந்த எண்பது தொண்ணூறு வரிய சீவியத்திலை கண்டறிஞ்ச உண்மை. அதுதான் சொல்லு றது ..கண்டது கற்றவன் பண் டிதனெண்டு. அந்த உலக ஞான அனுபவத்திலைதான் சொல்லு றன் இந்த சின்னஞ் சிறிசிலை சிறுப் பிளைப் பட்டதுகள் இருக்கே, அதுகள் பேந்து பின்னடிக்கு பென்னும் பெரிய பொறுப்புள்ள மனிசராகிறதைப்போலை, வேளா வேளைக்கு வயிறு முட்ட சொகி சாக உண்டுறங்கிறதுகளுக்கு ஒரு நாளும் அந்தப் பொறுப்பு வராது கண்டியோ. அன்னப்பிள்ளைக்கு நானேதும் புத்திமதி சொல்லி இருப்பன் எண்டு நினைக்கி றியோ?...எந்த நட்டாற்றில் கைவிட்டு விடுவனே எண்ட ஐமிச்சத்தோடை எனக்குப் பின் ஞலை வந்தவள்தான் அன்னப் பிள்ளை. அதுதான் நான் முதி

லில் சொல்லேனே. வயிற்றுக்கு வாய்க்கில்லாமல் நாராங்கலடிச்சுப் போய் வளருகிறதுகள் தான் பின்னுக்குச் சரியானபடி சிக்கனமா சீவியத்தைக் கொண்டோடி, மற்றவையையும் இழிச்சுக் கொண்டு வரக்கூடியதுகள் எண்டு. அன்னமும் எவ்வளவு பொறுப்புள்ள மனுசியாகி விட்டாளெண்டிருய்?

அதுதான் சொல்றது அல்லி, குருவும் தாரமும் ஒருவன்ரை கருவிலமைப்பெண்டு. அன்னம் வீட்டுக்கு வந்த முழுவியளம் எண்டா சொன்னன் சே, அது சரியான பிசகு கண்டியோ. எனக்கும் இப்ப வரவர அறணை மறதி வந்திடுது சண்டியோ. பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடைக்காதெண்டு சொல்லுங்கள் எங்கை, அன்னம் வீட்டுக்கு வந்த முழுவியளம் எண்ட இடத்திலை தானை விட்டனுன். அப்ப எனக்கு வீடேது? வாசலேது? மேலே ஆகாயம் கீழே பூமி எண்ட நிலையிலை வந்த எனக்கு வீடுமில்லை வாசலுமில்லைக் கண்டியோ. ஆனல் வீட்டுக்கு வரவேண்டிய சீதேவி வந்திட்டாள் எண்டிறது மட்டும் எனக்குத் தெரிஞ்சிட்டுது.

என்னெண்டாய்? நித்திரை வருதோ?...பெரிசாக் கொட்டாவி விடுகிருய்.. என்னும் எரப்பனுக்குத்தான். என்ன கேட்கிறியோ, சரி, கேள். ம்...எதிலை விட்டனுன்? ஓ, தீவிலிருந்து வந்து அன்னம் மூண்டு கல்லு வைச்சு நமோவண அடுப்பு மூட்டின இடம் இந்த வளவுதான் அல்லி. அவள்ளை கைராசியோ, இல்லை அந்தக் கல்லுகளின்ரை மகிமையோ கடைசிவரைக்கும் இந்த இடத்திலைதான் இருக்கவேண்டிய நிருபம் வந்திட்டுது. அப்ப இது ஆற்றை வளவெண்டு நினைக்கிருய்?...

ஆ, பார்த்தியே, முக்கியமான ஒண்டைச் சொல்ல மறந்திட்டன். இட்பிடி நேராக மூக்கைத் தொடுகிறதுக்கு தலையைச்சுற்றி தொட்டவனுட்டம் நானும் காடேறிப்பேய் கொண்டு திரிஞ்சவன்ரை கதையா எங்கையெல்லாமோ சுத்திக் கொண்டிருக்கிறன்.

அதைச் சொல்லாவிட்டால் நான் எத்தினை சென்மங்கள் எடுத்தாலும் நரகக் குழியிலை புழுவாக் கிடந்துதான் நெளிவன் கண்டியோ. அப்ப இந்தக் காணி பள்ளன் வடிவேலுவுக்குச் சொந்தமான நிலம் கண்டியோ. அவ ஒரு நல்ல மனிஷன். குந்தியிருந்து கூழ் காச்சிக்குடிக்க இந்த இடத்தை தந்தவன் வடிவேலு தான் நல்ல சீவன் ஆனல் வல்ல சீவனில்லாமல் போவிட்டான் பாவி. ஹம்..ம்.

வடிவேலுவின்ரை இந்த முப்பது பரப்புக் காணியும் எனக்கெப்பிடி வந்து சேர்ந்ததெண்டு கேட்கிறியே அல்லி. கேள் கேள் நல்லாக் கேள். ஏதாவது கள்ள உறுதி முடிச்சு கடைப்புளி வேலையேதும் செய்து அபகரிச்சானே இந்த முத்தையன் எண்டு நினைச்

சாலும் நினைப்பாய். இல்லையே? திண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யிற அப்பிடிப்பட்ட போக்கணங் கெட்ட முத்தையனுகை இருந்தால் ஆண்டவன் என்னை இந்தளவுக்கும் இப்பிடிக் காலாகிகையாக வைச்சிருக்கமாட்டார் தெரிஞ்சுதே.

இவன் வடிவேலு இருக்கிறுனே இல்லையோ, ஒரு பேய்க் கூதிமேன். அப்ப பொன்னுக்கோன் எண்ட ஒருத்தர் இருந்தார். வெறும் ஒருத்தர் எண்டு சொன்னுல் வாய் வெந்து போவிடும் கண்டியோ. பெரிய விலாசக்காறனும், பணக்காரனும். அந்த நாளிலை சுறுட்டுக் கொட்டில் முதலாளி பொன்னுக்கோனெண்டால் பேந்து சொல்ல வேண்டியதில்லை. அவர் ஆடின ஆட்டமும் ஓடின ஓட்டமும் இருக்கே எடே அப்பா. அதிலை அஞ்சிலொரு பங்குகூட மனிசர் செய்திருக்க மாட்டார்கள், விடிஞ்செழும்பினுல் வெள்ளைக் குதிரையிலைதான் சவாரி செய்வான் மனிசன். சொந்தமா ஏழு பெண்டில். தாலி கட்டாததுகள் கனக்க. அப்பிடி ராச்சியம் நடத்தினவன் மனிசன். முறையான ஏழுக்கும் முப்பது நாப்பது பிள்ளையள். அப்பன் பேர் தெரியாததுகள் எத்தினையோ. சரி அது போகட்டும். அதையேன் உனக்கும் எனக்கும்.

முப்பது நாப்பது பிள்ளைகளெண்டுதானே சொன்னனுன்?... ஓ, இதுகளுக்கு...எதுகளுக்கு? இந்த யாழ்ப்பாணத்து ராசாவே சிங்கு பொன்னுக்கோனின்ரை மக்களுக்கு - அதுகளுக்கு எரப்பன் வெடிவால் முளைச்சவுடனே அப்பன் வழியே அதனதன் வழியெண்டாகி, அப்பன் ஓரடி பாஞ்சால் அதுகள், ஆர்? பெடியள். பத்தடி பாயத் தொடங்கி விட்டுதுகள். ஆளுக்குப் பத்துப் பத்தடி ஒவ்வொருத்தரும் பாஞ்சுகொண்டு வந்தால் கணக்கு எங்கைபோய் முடியுமெண்டு தெரியும்தானே. கப்பல் கரை தட்டிவிட்டுது கண்டியோ. அதைப் பழுது பார்த்து பழையபடியும் ஓடவிட பொன்னுக்கோன் தன்ரைவானமட்டும் தலையாலை கிடங்கு கிடங்கு கிண்டிக்காலை பார்த்தார். இதுக்கிடையிலை புலி விழுந்தது நரிக்குத் தாயமெண்ட மாதிரி இதை வைச்சுக்கொண்டு காரியங்களைச் செய்யத் துணிஞ்சு விட்டாங்கள் ஆர் பொன்னுக்கோனுேடை நேருக்கு நேராக பொருதி வெற்றி காண முடியாதெண்டு நினைச்சிருந்த அவரோடை உள்ளாளும் கள்ளாளுமாக மிளங்கின ஆட்கள். அதனுலைதான் சொன்னன். புலி விழுந்தது நரிக்குத் தாயமாச்செண்டு. இந்தப் பொறுத்த பூண்டிக்கைதான் பொன்னுக்கோன் வடிவேலு போலை ஆட்களை இழுத்துப் பிடிச்சுக்கொண்டார்.

இந்தச் சாதியளை அப்ப தெரியாதே? 'டேய் வடிவேலா' எண்டு கூப்பிட்ட வாயாலை 'தம்பி வடிவேலு' எண்டு சொன்னுல் போதும். உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரையும் உருகி

ஏதோ தங்கடை வீடுகளிலை சம் மந்தம் சாவாசம் வைச்சுக் கொள்ளச் சரிசமமாக வந்திட்டினம் எண்டு நினைக்கிற சாதியள். வெறும் வாய்ப்பந்தல் போட்டே அலுவலைப் பார்க்கத் துடங்கி விட்டார் பொன்னுக்கோன்.

அதிலையும் இந்த வடிவேலு இருக்கிறானே...இவன் கொஞ்சம் முதிசக்காறன் கண்டியோ... காசு பணமாக இல்லாவிட்டாலும் காணி பூமியெண்டு வைச்சாண்டவன். பொன்னுக்கோனின்ரை சுருட்டுக் கொட்டிலுகளிலை தொட்டாட்டி வேலை செய்து கொண்டிருந்தவங்களிலை இவனும் ஒருத்தன். வடிவேலுவை பொன்னுக்கோன் வடிவாகப் பதப்படுத்திப் போட்டார். ஏதோ வசிய மருந்து போட்டுக் குடுத்தவன் மாதுரி ஆகிவிட்டான் வடிவேலு. திண்டதையே வாயுக்காலை முதலாளிக்குக் கக்கிக் குடுக்கிற நிலைக்கு வந்திட்டான். இனிப்புப் பூசிறதெண்டால் அப்பிடியொரு இனிப்பா? பனங்கட்டி திண்ட நாய்க்குட்டியாட்டம் அவற்றை காலைச் சுத்திக் கொண்டு திரிஞ்சான் வடிவேலு அதாகப் பட்டது ஏவல் பேய் கூரையைப் பிடுங்கின மாதிரி எண்டு சொல்லுங்களே அந்த மாதிரிக் கருமமாற்ற நல்லாபதப் படுத்தி எடுத்துப் போட்டார் பொன்னுக்கோன்.

அப்பதான் ஒருநாள் வடிவேலு வந்து என்னட்டை மெல்லீசாக வாய்விட்டான். அதுக்கு நான் வஞ்சகமில்லாமல் பொன்னுக்கோனைப் பற்றியும், அவற்றை நிலைமையையும் அறிஞ்சளவுக்குக் கேள்விப்பட்டதைச் சாடைமாடையாச் சொன்னன். அறுதலி பிள்ளை...அதுதான் சொல்லுறது அல்லி, நன்மைக்குக் காலமில்லையெண்டு...சிரிச்சுச் சிரிச்சு சொல்லுறவனெல்லாம் சொல்லுறதெல்லாம் நன்மையெண்டும், அழுதழுது சொல்லுறவனும் சொல்லுறதுகளும் தீமையெண்டும் நினைக்கிற சனங்கள். அதை இன்னொருமாதிரியும் சொல்லுங்கள் அல்லி. எப்பிடியெண்டாய்?... மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காது?...மணிகட்டின மாடு சொன்னால் கேட்குமெண்டும். பின்னை வடிவேலு சொன்னால...

"என்ன முத்தையாபிள்ளை ஒரு விசயம் கதைக்கலாமெண்டு பார்க்கிறன்" எண்டான்.

"ஒண்டென்ன வடிவேலு...ஒன் பதாசச் சொல்லு. உன்ரை வளவுக்கை குடியிருக்கிற என்னோடை கதைக்க ஏன் கூச்சப்பட வேணும்?"

"அதெல்லாம் ஒண்டுமில்லை முத்தையாபிள்ளை. இந்தக் காணியை ஈடு வைக்கலாமெண்டு பாக்கிறன். அதுதான்..."

"அதுக்கு எங்களை எழும்பச் சொல்லுறியா வடிவேலு? அதுக்கேதும் நான் இப்ப அடாத்தோ? இல்லை முத்தையன் ஏதாவது வல்லடி வழக்குக்கு வந்திடுவான் எண்டு பார்த்தியோ?...இஞ்சை பார் வடிவேலு, நீ சும்மா கூலி

கீலி ஒண்டுப் வாங்காமல் இவ்வளவு காலமும் இருக்கவிட்டதுக்கே நான் எவ்வளவு செய்தாலும் போதாது. ஏதோ ஒரு இடத்தைப் பார்த்துக் கொண்டு இண்டைக்கோ நாளைக்கோ கிளப்பிவிடுகிறன். 'ஆண்டி குண்டியைத் தட்டினால் பறப்பது சாம்பல்' எண்ட கதை என்ரை கதை. வேறை என்ன வடிவேலு செய்யச் சொல்லுறாய்?''

''நீர் என்னவும் நான் ஏதோ சொல்லவர நீர் உம்பாட்டிலை ஊர் தேசமெல்லாம் சுத்தி வந்திட்டீர்... நல்ல கதைதான். நீர் கூலி தராமல் இருந்ததெண்டு ஆர் சொன்னது? நீங்கள் வந்து குடி இருக்கத் துவங்கின பிறகு தானே வளவு இந்தளவக்கும் வளவாயெண்டாலும் கிடக்கு இல்லையெண்டால் இதுக்குள்ளே ஆரும் கால் கில் வைச்சு வர முடியுமே...சீ, சீ, சீ.. கொல்லைக் இருந்து கோடாரி விழுத்தி எவ்வளவு கிலிசம்பறை படுத்திக் கிடந்தது நாத்தல் சவங்கள்... ஏன் உமக்குத்தான் தெரியுமே... என்ன நிலையிலை கிடந்த காணியெண்டு''

வடிவேலு சொன்னது உண்மைதான் அல்லி. கூலி இல்லாவிட்டாலும் பறவாயில்லை வளவு சுத்தமாகவும் அறுக்கையாகவும் இருந்தால் போதுமெண்டுதான் அவனும் நினைச்சு அதைச் செய்திருக்கிறான். இதுக்கை வந்ததும் நானும் அன்னமும் சுக்கூசு அள்ளினதுதான் முதல் வேலை. வடிவேலு ஒளிவு மறைவில்லாமல் பேசின பேச்சை இப்ப நினைச்சாலும்.. ஹ்ம் ஆனால் அருதலி பிள்ளை.. நல்லா அஞ்சோஞ்சு பாராமல் அவசரப்பட்டு முதலாளி பெண்ணுக்கோனை நம்பி பண்டிகிளரயை நம்பி அற்றிலை இறங்கினவன் கதையாக இறங்கி விட்டான் சண்டாளன்.

''அப்ப என்ன வடிவேலு செய்யச் சொல்லுறாய்?'' எண்டன்.

''அதுதான் முத்தையாபிள்ளை உர்மட்டை ஏதாவது மிச்ச கொச்சம்... மிச்சப்பகுதி இல்லாமலே இருக்குப்?.. அதுதான் இதை ஈடாக வைச்சுக்கொண்டு கொஞ்சக் காசு தாருமன்.'' எண்டான்.

''என்ன வடிவேலு பகிடி பண்ணுறியா? என்னட்டை அந்தளவு தொகை வகையெல்லாம் ஏது? ஏதோ முதல் கடவுள், இரண்டாவது உன்னரை புண்ணியத்தாலையும் கடன்தனி இல்லாமல் சீவிச்சுக் கொண்டு போறமே யொழிய சப்பாத்திப் பகுதியெண்டு என்னத்தைச் சொல்ல?''

''என்னவும் ஆளுமாளுமாக இருக்கிறியள், அப்பிடிக்குத்தான் இரண்டை மூண்டை இன்னுமா கைபிலை மடியிலை பிடியாமல் இருக்கிறியள்?''

''இரண்டு பேரும் இரண்டு பேராத்தான் இருக்கிறம். இன்னும் மனிசின்ரை மடியிலை மூண்டாவதைக் காணேல்லையடாப்பா...''

"உமக்கு எப்பவும் முசுப்பாத்திதான். உம்மாணை பகிடியில்லை முத்தையாபிள்ளை. நல்லா யோசிச்சு ஒரு முடிவு சொல்லும்"

"அதுசரி வடிவேலு இப்ப எதுக்கு இந்தக் காரியம் செய்யத் துணிஞாய்?"

"........"

"ஏன் அதைச் சொல்ல பயப்படுகிறாய்? முதலாளி பொன்னுக்கோனுக்காகத்தானே உந்தக்காரியம் செய்யத் துணிஞ்சிருக்கிறாய்? ஏன் அவர்தானே ஏழு கிணத்தடி வளவு வாய்க்கால் வைச்சிருக்கிறவராச்சே. அதிலை ஒண்டை ஈடுபடு வைச்சாலென்ன? அல்லது வித்தாலென்ன? ஏழை பரதேசியின்ரையும் அறுத்திடிச்சு வாயிலை போடவந்திட்டாரோ மனிசன்? இஞ்சை பார் வடிவேலு 'உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாது' எண்டு ஏதோ சொல்லுவங்கள். முதலாளி தண்ணி கண்டுவிட்டார் எண்ட சங்கதியை நானும் கேள்விப்பட்டிருக்கிறன்தான். அது இன்னும் உங்க தரவளி ஆக்களுக்கு எட்டவில்லைப் போலை கிடக்கு கண்டியோ. அது தெரிஞ்சால் நீ இப்பிடி ஒரு நாளும் செய்யத் துணியமாட்டாய் வடிவேலு. நீ, நீ சாக மருந்து குடிக்கப் பார்க்கிறாய். வீணான உந்த விசர் யோசனையை விட்டிட்டு உன்ரை அலுவலைப் பார்த்துக்கொண்டு போ."

"சே, சே, அப்படியொண்டுமில்லை முத்தையாபிள்ளை. எல்லாரும் மூலாதளியை உப்புடித்தான் கதைக்கினம் இப்ப. உள்ளிருந்த எனக்கா உள் விசயம் தெரியாமல் போகும்? கொஞ்சம் தொஞ்சு போவிட்டதெல்லவோ உண்மைதான். ஆனால் துரவு மட்டத்துக்குப் போகவில்லை."

நான் அப்பவே சொன்னனே அள்ளி... இந்தச் சாதியளின்ரை சங்கதிகளைப்பற்றி பொன்னுக்கோன் இவனை எப்பவோ ஒரு நாள் அடுப்படியக்கை உள்ளட்டுத் தண்ணி குடிக்க விட்டிருப்பான். அதுதான் இவன் சொன்ன 'உள்ளிருந்த எனக்கு' எண்டிற ஞாயம் கண்டியோ. பேய்ச் சூதி மேன்... பிறகு கேளன்...

"வடிவேலு நல்லா யோசிச்சுப் பார். முதலாளி தொஞ்சுபோனதை நீ தாங்கி நிறுத்திப்போடலாமெண்டு பார்க்கிறாயோ? தண்ணியிலை தத்தளிக்கிறவனை நல்லாச் சுழியோடக்கூடியவன்தான் தன்னிட்டாக தன்னையும் காப்பாற்றி அவனையும் கரைசேர்ப்பான். அதில்லாதவன் கெதி அதோகெதிதான் வடிவேலு. அவனைக் காப்பாற்றப் போய் இவனும் மாண்ட கெதியாகத்தான் முடியும். நீ இப்ப செய்ய நினைக்கிற காரியமும் அப்படிப்பட்டதுதான் கண்டியோ. விசர்ச் சூதி மேனை... இப்பிடிச் சொல்லுறன் எண்டிறதுக்காகக் கோவிச்சுக் கொள்ளாதை வடிவேலு...... தொஞ்சதெண்டால் என்ன அர்த்தம் எண்டு நினைக்கிறாய்?... உந்த மாதிரி ஆட்களை நான் என்ரை சீவியத்திலை கன பேரைக் கண்டிட்டன். உந்தத்

தெரிஞ்சது துவண்ட தெண்டிற சங்கதி அவங்கடை பாஷையிலை துப்பரவாகத் தோணி தண்ணி கோலிவிட்டுது எண்டுதான் அர்த்தம் சண்டியோ. வண்டில் நல்லாச் சேத்திலை புதைஞ்சு போச்சு. உன்னைமாதிரி ஆட்களைக்கொண்டு சில்லெடுப்பிக்கப் பார்க்கிறார் பொன்னுக்கோன். அது எனி முடியாது வடிவேலு ... சில்லைக் கொஞ்சம் அசைச்சாலும் இன்னும் கீழைதான் இறங்குமேயொழிய மேலை வராது அது அப்பிடியான இடம் ... வண்டில் பாரம் பூமியிலைதான் எண்டு விட்டுவிட வேண்டியதுதான் நான் சொல்லக் கூடிய ஒரே வழி. உவங்கள் எந்த வகை ஆட்களெண்டு தெரியுமே? நீ ஏதோ உவையைப் பற்றி பழமும் தின்டு கொட்டையும் போட்ட ஆளெண்ட நினைப்பிலை உன்ரை தகுதிக்கேலாத காரியத்தைச் செய்யத் துணியிறாய் உவங்கள் சும்மா உழப்போன பண்டியைப் பல்லுக்கு இதம் பார்க்கிற பரம்பரை.''

''எல்லாம் சரிதான் முத்தையாபிள்ளை. நீரும் எல்லாரையும்போலத்தான் எழுந்தமானத்துலை கதைக்கிறீர். உம்மையும் ஒரு மனிசனெண்ட கணிப்பிலைதான் நான் இந்தக் காரியத்தைக் கேட்க வந்தனான். நீங்கள் நினைக்கிற மாதிரி அப்பிடியொண்டும் கப்பல் இன்னும் தண்ணி கோலித் தாளவில்லைக் கண்டீரோ. சரி, அப்பிடித்தான் எண்டு வைச்சுக்கொண்டாலும் விழுந்தவனை மாடும் ஏறி மிரிக்கவிட்டுப் பார்த்துக்கொண்டும் நிற்கிறதோ? ஆளுக்கொரு கைகுடுத்து அவனைத் தூக்கிவிடுகிற எண்ணமே எங்கடை ஆக்களுக்கு ஒருநாளும் வாறதில்லை. அதிலையும் முத்தையாபிள்ளை. உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேணும் கண்டீரோ இந்தக் காணி பூமி எல்லாம் என்ரை அப்பன் பூட்டன் அகாலத்திலை இருந்து கொண்டு வந்தகள். இந்த மாதவாளிப்பிள்ளை முந்தைருக்குச் சேவகஞ் செய்து அவங்களிட்ட பிச்சையிலை மிச்சம் பிடிச்சுக் கேட்டின சொத்துக்கள்தான் இவங்கள். அவங்கள் தவிர அப்பு மனிசன் நல்லா இருந்தவன், நாலு பேரை வாழ வைச்சவன் சரி, அப்பிடிக்கான் கெட்டு நொந்து போயிட்டாலும் விட்டு விடுகிறதோ? ... இதெல்லாம் வரும் போகும். இரவு பகல் மாதிரி. இக்கணம் மண் கிடங்குக்குப் போகையுக்கை இதுகளெல்லாம் கொண்டாபோகப்போறம்? இருக்கும் வரைக்கும் ஒருத்தருக்கொருத்தர் உதவி ஒத்தாசையா இருக்கிறதுதான் மனிசத்தனம்.''

வடிவேலு சொன்ன மனிசத்தனத்தைப் பற்றிக் கேட்டியோ அல்லி? அவனும் மனிசன் இவங்களும் மனிசரே? ஆண்டவன் நல்ல இருதயங்களை எங்கையெங்கை வச்சிருக்கிறாரெண்டு அப்பதான் கண்டுகொண்டன். ஆனால் அறுதலி பிள்ளைக்கு மனிசரையும் தெரியவில்லை, மற்றவங்களையும் தெரியவில்லை. அதுதான் வந்தவினை.

''எதுவோ வடிவேலு, எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னன். எனி

உன்ரை விருப்பம்" எண்டுவிட்டன்

வடிவேலுவுக்கு ஈட்டுக்கு மூவாயிரம் குடுத்தாச்சு. அது எப்பிடியெண்டு கேட்கிறியா? நானும் அப்பிடிக்கேட்டுத்தான்போனன். என்னட்டை ஏது மூவாயிரம் ரூபாய்? அண்டாடிச்சு அண்டு வாயிலை போடுற அன்றாடத் தொழிலாலை அவ்வளவு தொகை வகையைத் தேடுற தெண்டால் என்ரை ஜென்மத்துக்கும் முடியாத காரியம் தானே. ஆனால் அன்னப்பிள்ளை மூவாயிரத்தையும் கொண்டுவந்து எனக்கு முன்னாலை வைச்சவுடனை அப்படியே சமிச்சுப்போவிட்டன் கண்டியோ. அவளை ஒரு மாதிரியாக மேலிருந்து கீழாக உச்சந் தலையிலை இருந்து உள்ளங்கால் பொறுக்க ஒரு சந்தேகப் பார்வை பார்த்தன். அதுக்கு என்ன பொருளெண்டு நினைக்கிறாய்? எனக்குத் தெரியாமல் ஏதாவது 'லயின் கியின் ஓடுறாளோ' எண்ட கருத்துத்தான். பார்த்தியோ அல்லி, தன் பலம் தனக்குத் தெரியாத யானையின்ரை போக்குமாதிரி எனக்கும் என்ரை பலத்திலையே சந்தேகம் வந்திட்டுது அன்னத்தை நான் அப்பிடி அவநம்பிக்கைபட்டது எவ்வளவு பாவ நினைப்பு கண்டியோ அந்தப் பாவ நினைப்பு ஒண்டுக்காகத்தான் இன்னும் இப்பிடிக்கிடந்து அழுந்தி ஆறணியப் படுகிறனோ என்னவோ தெரியவில்லை. அது ஆண்டவனுக்குப் பொறுதி. அப்பிடியெல்லாம் நான் நினைச்சிருக்கக் கூடாதுதான். தன்ரை வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி எனக்குத் தவுந்தைத் தந்திட்டு தான் தண்ணியைக் குடிச்சு இதைச் சேர்த்திருக்கிறாள் எண்டால், என்ரை பாவ நினைப்புக்கு என்ன தீர்வை தீர்த்து எழுதி வைச்சிருக்கிறாரோ அங்காலை போனால்தான் அது தெரியும்.

(தொடரும்)

# முன்யோசனை

ராஜநீதியில் நிபுணனான எதிரியின் யோசனையை அறிந்தவன் தான் ஆபத்தைத் தாண்டுவான். உலோகத்தினால செய்யப்படாத கூர்மையான ஆயுதமும் உண்டு. அதைத் தடுக்கும் உபாயத்தை எவன் அறிந்து கொள்கிறானோ அவன் பகைவர்களால் கொல்லப்படமாட்டான்.

முள்ளம்பன்றி பூமியைத் தோண்டிக் காட்டுத் தீயிலிருந்து தப்பித்துக் கொள்ளும்.

அறிவாளி நட்சத்திரங்களினால் திசையை அறிகிறான்.

— மகாபாரதம்

# சங்கச் செய்திகள்

## கொடிகாமம் சங்கத்தை கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் பாராட்டுகிறார்

தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 11-3-89 சனிக்கிழமை சங்கத் தலைவர் திரு. வ. த. செல்லக்கண்டு தலைமையில் நடைபெற்றது.

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு ஜே. அல்போன்ஸ், சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. கி சிவப்பிரகாசம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

எதிர்காலத்தில் சங்கங்களின் நடவடிக்கைகள் பற்றி கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. அல்போன்ஸ் விளக்கிக் கருத்துரை வழங்கியதுடன் கொடிகாம சங்கத்தின் ஆளுமையை வெகுவாகப் பாராட்டியும் பேசினார்.

கூட்டுறவுப் பரிசோதகர் திரு. அருள்பிரதாசன், கூட்டுறவுப் பரிசோதகர் திரு. சி. சபாரத்தினம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், கிராம சேவை அலுவலர் திரு. சி. அப்பலவாணபிள்ளை, சங்கப் பொது முகாமையாளர் திரு. சி. இரத்தினசிங்கம் உட்படப் பலரும் உரையாற்றினர்.

நிர்வாகசபைத் தெரிவின்போது திரு. செல்லக்கண்டு தலைமையிலான நிர்வாக சபையே தொடர்ந்தும் சங்க நிர்வாகத்தை நடாத்தப் பெரும்பான்மை அங்கத்தவர்கள் நம்பிக்கை தெரிவித்ததன் பேரில் திரு. செல்லக்கண்டு தலைமையிலான நிர்வாக சபையே மீண்டும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

## வருந்துகிறோம்



எமது ஊர்காவற்றுறை தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் திரு யாக்கோப்பு அமலதாஸ் அவர்களின் அகால மரணம் சக அங்கத்தவர்களை, நிர்வாகிகள், பணியாளர்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் பேரதிர்ச்சியையும் அருந்துயரையும் ஏற்படுத்தியுள்ளது. சங்கத்தின் அச்சாணியாகத் திகழ்ந்த திரு அமலதாசின் இழப்பு ஈடிணையற்றது. சங்க வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியவை. அதன் மூலம் அவர் நீண்டகாலம் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராக இருந்ததுடன் பல பொறுப்புள்ள பதவிகளையும் வகித்துள்ளார். அங்கத்தவர், நிர்வாகிகள், பணியாளர் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி எல்லோரது நன்மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தார். அவர் செய்து வைத்துச் சென்ற சேவைகளிலெல்லாம் அவரது முகம் ஒளிர்ந்துகொண்டே இருக்கும். மிக இளமையிலேயே இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு பரலோக வாழ்விற்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். இறைவன் சித்தமும் அதுவேயானால் அவருடைய ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல பரலோக பிதாவை வேண்டி எமது கண்ணீர்ப் பூக்களை அவர் பாதகமலத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

---

## சிறந்தவை சில

யாசித்து நெய்யும் பாலும் தயிரும் சேர்ந்த சிறந்த அன்னத்தை உண்பதை விட, உழைத்து உண்ணும் தண்ணீர்ச் சோறும் சிறந்தது.

வீரமும் புகழுமில்லாமல் மங்கி நெடுங்காலம் இருப்பதைவிட வீரமும் புகழும் பெற்றுச் சிறிது காலம் வாழ்வது சிறந்தது.

உமிக் குவியல் நெடுநேரம் காந்திக் கருகுவதைவிட தைலமுள்ள மரம் ஜொலித்துச் சிறிது நேரம் எரிவது சிறந்தது.




பனை அபிவிருத்திச் சபை

ஸ்வர்ணம் பப்ளிசிரீஸ், 5, கஸேப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்